08.04.2022 டி.வி.சி. 201/2020 RW2 ஜான்சிராணி ப.எண்.87

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி 2 மீண்டும் அழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு 2 மகன்கள் என்றால் சரிதான். ஒரு மகள் என்றால் சரிதான். எனது இளைய மகன் இறந்துவிட்டார். மூத்த மகனான 1ம் எதிர்மனுதாரர் திருமணத்திற்கு 2 நாட்களுக்கு முன்னர் காணாமல் போய்விட்டார் . அதனால் இளைய மகனை மனுதாரருக்கு திருமணம் செய்து முடிக்க கட்டாய படுத்தினோம் என்றால் சரிதான். மனுதாரர் ஜீவதா எனக்கு உறவினர் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பாகவே மனுதாரரையும், அவரது குடும்பத்தாரையும் தெரியும் என்றாலும், விசாரணை செய்து தான் திருமணம் செய்தோம் என்றால் சரிதான். எனது மகன் எந்த வேலைக்கும் செல்லாமல் வீட்டில் தான் உள்ளார். நான் பிராமாண வாக்குமூலத்தில் TNPL கம்பெனியில் ஒப்பந்த பணியாளராக வேலை செய்கிறார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அவர் வேலையை கற்றுக்கொள்வதற்காக அங்கு பயிற்சி எடுத்தார். கரூர், சுங்ககேட்டில் என் பேரில் ஒரு வீடும், என் கணவர் பேரில் ஒரு வீடும் உள்ளது . திருமாநிலையூரில் என் பேரில் வீடு உள்ளதா என்றால் இல்லை. என் கணவரில் பேரில் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. எனது மகன் எலக்ட்ரிசியனாக மாதம் ரூ.15 ஆயிரம் சம்பாதித்து வருகிறார் என்றால் சரியல்ல. என் பேரில் உள்ள வீட்டை நான் வாடகை விட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தான் வசித்து வருகிறேன். என் பேரில் உள்ள திருமாநிலையூரில் உள்ள வீட்டையும், சுங்ககேட்டில் உள்ள வீட்டையும் வாடகைக்கு விட்டு மாதம் ரூ.40 ஆயிரம் வருமானம் வருகிறது என்றால் சரியல்ல. நானும், எனது மகன் மற்றும் குடும்ப உறவினர்கள் சேர்ந்து மனுதாரருக்கு மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் குடும்ப வன்முறை செய்தோம் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு 2 நாட்கள் முன்பு எனது மகன் அவருடைய முன்னாள் காதலியை திருமணம் செய்து கொள்வதற்காகத்தான் சென்று விட்டார் என்றால் சரியல்ல. எனது மகன் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுப்படி தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு இன்று 08.04.2022ம் தேதி கையெழுத்து செய்தார்.

Sd/-R.Sujatha,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கரூர்.